சென்னை | வெள்ளி, செப்டம்பர் 21, 2017

தின இதழ்



ஸ்ரீ சாய்ராம் கல்வி நிறுவனம் சார்பில்

# 2 நாள் சர்வதேச கருத்தரங்கம்

**தாம்பரம், செப்.21–**

மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவனம் சார்பில் உலக பொருளாதாரம், வர்த்தகத்தின் நிலைத் தன்மை, வளர்ச்சியில் சமூக அறிவியல் ஆராய்ச்சியின் பங்களிப்பு குறித்த 2 நாள் சர்வதேச கருத்தரங்கம நடைபெற்றது.

இதில் ஆராய்ச்சி ஆய்வு கட்டுரை புத்தகத்தை அமெரிக்காவின் அன்மெட்ரிக் இயக்குனர் பீட்டர் கிளாரிட்ஜ் வெளியிட்டார்.

இதில், ராஜீவ் காந்தி இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குனர் மதன் மோகன் கோயல், ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி முதல்வர் ஜெயக்குமார், தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் பழனிக் குமார், மேலாண்மை இயக்குனர் மாறன் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.